# இஸ்ரேல் - பாலஸ்தீனப் பிரச்சினை எப்போது முடியும்?



**க.திருநாவுக்கரசு**

திராவிட இயக்க ஆய்வாளர்

பாலஸ்தீனத்து காஸா நகரிலிருந்து பட்டினி, பசி, சாவு இவற்றிற்கிடையே மக்கள் கொத்துக் கொத்தாக மடிகிறார்கள். இஸ்ரேலின் தாக்குதலால் மக்கள் காஸா நகரை விட்டு வெளியேறிக் கொண்டு இருக்கிறார்கள். காஸாவில் இஸ்ரேல் இராணுவம் 2023ஆம் ஆண்டு அக்டோபர் 7ஆம் தேதி முதல் தனது தாக்குதலை நிகழ்த்தி வருகிறது. இந்தத் தாக்குதலில் செப்.23ஆம் தேதி வெளியான செய்திகளின்படி 65,334 பேர் கொல்லப்பட்டு இருக்கிறார்கள். இத்தாக்குதலால் இது வரை 1,67,000 பேர் காயம் அடைந்துள்ளனர். இதுவன்றி ஆயிரக்கணக்கானவர்கள் கட்டட இடிபாடுகளில் புதையுண்டு இருக்கலாம் என்று செய்திகள் வெளியாகி உள்ளன. இது குறித்துத் தி.மு.கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மனம் நொந்து அறிக்கை வெளியிட்டு இருக்கிறார்.

பாலஸ்தீனத்தை அங்கீகரிக்க மறுக்கிறது இஸ்ரேல். எதனால்? பாலஸ்தீனம் ஒரு நாடு என்று அங்கீரிக்கப்படுமானால் இஸ்ரேலின் இருப்புக்கே ஆபத்து விளையக்கூடும் என்று ஓர் அச்சம் ஏற்பட்டு உள்ளது. உண்மையில் 1948க்கு முன்பு இஸ்ரேல் என்று ஒரு நாடே இல்லை. பாலஸ்தீனமும் இஸ்ரேலும் அரபு நிலத்தில் உருவானவை. இஸ்ரேலின் நிலப்பகுதி பாலஸ்தீனத்திலிருந்து உருவானது. அதாவது நிலப்பகுதிகள் ஆக்கிரமித்து உருவாக்கப்பட்டவை. ஆகவே இஸ்ரேல் என்ற ஒரு நாடு இருக்கக்கூடாது என்று பாலஸ்தீன அமைப்புகள் கூறி வருகின்றன. இதனால் பாலஸ்தீன பிரச்சினை பல ஆண்டுகளாக நீடித்து வருகிறது. இது பல நூற்றாண்டுகளாக வரலாற்று சிக்கல் உள்ள ஒரு பிரச்சினையாகும்.

காஸாவில் இஸ்ரேல் இன அழிப்பை மேற்கொண்டுள்ளதாக அய்.நா. குற்றம் சாட்டியது. இது மட்டுமன்றி, கடந்த ஜூலை மாதம் இறுதியில் கனடா, பிரான்ஸ் முதலான 15 நாடுகள் போரை நிறுத்தும்படியான ஒரு நடவடிக்கையின் மூலம் இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுக்கும்விதமாக பாலஸ்தீனத்தை அங்கீகரிப்பது என்கிற முடிவுக்கு வந்தன. அய்.நா.வில் 193 நாடுகள் உறுப்பு நாடுகளாக உள்ளன. இவற்றில் 150க்கும் மேற்பட்ட நாடுகள் பாலஸ்தீனத்திற்கு அங்கீகாரத்தை வழங்கிவிட்டன. இதில் இந்தியாவின் ‘அங்கீகார நிலை’ என்பது உலக நாடுகளிடையே பளிச்செனத் தெரியவில்லை. இருமுறை அய்.நா. சபையில் இஸ்ரேலை ஆதரித்து இந்தியா வாக்களித்தது. இது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. நடுநிலை வகுத்தது என்ற செய்தியும் உண்டு.

சோனியா காந்தி அண்மையில் பாலஸ்தீனம் தொடர்பாக ஓர் அறிக்கையை வெளியிட்டு இருந்தார். அதில் 1988இல் நவம்பர் 18ஆம் தேதி பாலஸ்தீனத்தை முறையாக இந்தியா அங்கீகரித்துள்ளதைத் தெரிவித்து இருக்கிறார். இப்போதைய நிலையை வெளிப்படுத்தும் விதத்தையும் சோனியா சுட்டிக்காட்டி இருக்கிறார். அதாவது, ‘நீதி, அடையாளம், கண்ணியம், மனித உரிமைகளுக்காகப் பாலஸ்தீன மக்கள் போராடி வரும் நிலையில் பாலீஸ்தீனப் பிரச்சினையில் இந்தியா தலைமைத்துவத்தை நிரூபிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது” என்று சோனியா கூறியிருக்கிறார். மோடி அரசின் பாலஸ்தீன அங்கீகாரம் வெளிப்படையாக இல்லை. அதன் தோற்றம் சரியில்லை என்பதே சோனியாவின் கவலை.

**அய். நா. பொதுச்சபையில் பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான் பாலஸ்தீனத்தை அங்கீகரிக்கும் அறிவிப்பை வெளியிட்டவுடன் சபையில் அங்கம் வகித்த உலக நாடுகளின் பிரதிநிதி கள் எழுந்து நின்று வரவேற்று கரகோஷம் எழுப்பினர். இஸ்ரேல் இதனைப் பயங்கரவாதத்திற்கான அங்கீகாரம் பரிசுவெகுமதி என்று கூறுகிறது. இதற்கு அய்.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்ரெஸ், கருத்துத் தெரிவிக்கையில், பிரான்ஸ், பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் வழங்கும் அங்கீகாரம் வெகுமதியோ, பரிசோ இல்லை. அது அந்த நாட்டுக்கான உரிமை என்று கூறி இருக்கிறார். இந்தப் போரை அரபு மண்ணில் இரு நாடுகளுக்கான உரிமைப் போர் என்று சொல்கிறோம். இப்போதைய நிலையை மட்டும் நாம் பார்த்தால் அது சரியானதாக இருக்க முடியாது. பாலஸ்தீனம் உரிமைக் கோரலுக்கு விடுதலை முழக்கத்திற்கு முந்தைய வரலாற்றையும் கவனிக்க வேண்டியவர்களாக நாம் இருக்கின்றோம்.**

மேலும் ஹமாஸ் அமைப்பை முழுமையாக அழிக்கும் பணி நிறைவடையும் வரை போரை நிறுத்தப்போவதில்லை என்று ஐ.நா. பொதுச்சபையில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அண்மையில் அறிவித்து இருக்கிறார். இது இஸ்ரேலின் எதேச்சதிகாரப் போக்கையே காட்டி நிற்கிறது.

* * * *

அய்ரோப்பா 30க்கும் மேற்பட்ட நாடுகளைக் கொண்டதாக இருக்கிறது. பல மொழிகள், கிறிஸ்துவ மதம், ஆங்கில மொழி என இருந்தாலும் அய்ரோப்பா கண்டம் ஒரு நாடு அல்ல. அதே போல அரபு நாடுகள் முழுவதும் ஒரே மொழிதான். தொடர்ச்சியான நிலப்பரப்புதான். ஒரே மதம்தான். எனினும் இவர்களால் ஒரு தேசிய இனமாகவோ தேசிய அரசுகளாகவோ காட்டிக் கொள்ள முடியவில்லை. இதனை இயற்கை கூறுபாடுகளின் விளைவுகள் என்று சொல்லலாம். ஆனால் இஸ்ரேலின் நிலை அப்படி அல்ல. அது யூதர்களுக்காக உருவாக்கப்பட்ட நாடு.

யூத இனம் பழமையானது, ஹிப்ரு மொழிப் பேசுபவர்கள் அவர்கள். இரண்டு உலகப் போர்களின் போதும் (1914-1918, 1939-1945) யூதர்கள் பல அடக்குறைகளுக்கும் ஒடுக்குதலுக்கும் ஆளாயினர். யூதர்களின் கல்வி அறிவு, செல்வச் செழிப்பு, போரிலிருந்து ஒதுங்கி நிற்கும் மனப்பான்மை என்பவை அவர்களது அடையாளங்களாகும். மேதை மார்க்ஸ் தொடங்கி ஐன்ஸ்டீன் வரை அனைவருமே யூதர்கள். இவர்கள் தங்களை யூத இனத்தவர் என்று வேறுபடுத்திக் காட்டிக் கொண்டதில்லை. நோபல் பரிசு பெற்றவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தால் இவர்கள்தான் அதிகம். உலகின் தொன்மையான மொழி பெற்று இருக்கிற பழமையான இனமான யூதர்களுக்கென்று ஒரு நாடு இல்லை. இது உலகத்தின் பார்வையில் இருந்து கொண்டே இருந்தது. என்ன காரணத்தாலோ யூதர்கள் உலகம் முழுவதும் துன்பப்படுத்தப்பட்டார்கள். இரஷிய அதிபராக இருந்த ஜோசப் ஸ்டாலின் கூட யூத தேசம் அமைவதை விரும்பினார். யூதர்கள் அரபு செல்ல உதவினார்.

யூதர்களுக்கு நாடு அமைய பிரிட்டன் உதவ வேண்டும் எனத் தொடக்கத்திலிருந்தே எண்ணியது. மேலும் சொல்வதானால் இந்திய நிலப் பரப்பில் 1938இல் இந்தியாவில் இஸ்ரேல் அமைய பிரிட்டன் கருதியது. திட்டமிட்டது. காந்தியார் பிரிட்டனின் திட்டத்தைக் கடுமையாக எதிர்த்தார். அந்த எதிர்ப்பை ஹரிஜன் ஏட்டில் கட்டுரையாக வடித்தார். அதோடு அந்தத் திட்டம் நின்று போயிற்று. பின்னர்தான் பிரிட்டன் யூதர்களை அரபு மண்ணில் குடி அமர்த்தியது. அரபு மண்ணில் பிரிட்டிஷ் இஸ்ரேலைத் திணித்தது. இதன் விளைவு என்னவாயிற்று?

மத்திய கிழக்கில் அரபு மக்கள்தான் பெரும்பான்மையினராக இருந்தனர். யூதர்கள் மிகக் குறைவாகவே இருந்தனர். இவர்களை அங்கே குடியேற்ற பிரிட்டிஷ் விரும்பியதால் 1920 முதல் 1940க்குள் யூதர்களின் வருகை அதிகரித்தது, இப்படி வந்தவர்களுக்கு அரபு மக்கள் அடைக்கலம் தந்தனர். யூதர்களைக் கப்பல்களின் மூலம் பிரிட்டிஷ் அரசு கொண்டு வந்து குடி அமர்த்தியது. இப்படி உலகம் முழுவதிலுமுள்ள யூதர்கள் ஜெருசலம் வந்து குவிந்தனர். அவர்களிடம் தங்க காசுகள் நிரம்ப இருந்தன. அரபு மக்கள் நிலங்களை விற்றனர். யூதர்கள் வாங்கினர். இந்தப் பரிவர்த்தனை எங்கே போய் முடிந்தது?

**பிரிட்டன் அய்க்கிய நாட்டுச் சபையில் 1947 நவம்பர் 29ஆம் தேதி ஒரு தீர்மானம் கொண்டு வந்தது. அந்தத் தீர்மானத்தின்படி பிரிட்டன் பாலஸ்தீன நிலபரப்பை யூதர்களுக்கும் அரபு மக்களுக்குமாகப் பிரித்தது. 1948 மே 5-இல் இஸ்ரேல் உருவாக்கப் பட்டதாக பிரிட்டன் அறிவித்தது. இதனால் அரபு மண்ணில் யூதர்களுக் கென்று இஸ்ரேல் என்று ஒரு நாடு உருவாயிற்று. அதாவது பிரிட்டன் உருவாக்கி யூதர்களுக்கு அளித்தது. பிரிட்டன் அறிவிப்பை அய். நாவில் 1948 மே 5இல் அறிவித்தது. அறிஞர் அண்ணா இது குறித்து ஒரு மாத இடைவெளியில் 06.06.1948 தேதியிட்ட தமது திராவிட நாடு வார இதழில் ‘இஸ்லாமா? இஸ்ரேலா’ என்று தலைப்பிட்டு எழுதினார்.** அந்தக் கட்டுரையில் பாலஸ்தீனத்தைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டிய செய்திகளை நாம் இனி, தெரிந்து மேற் செல்வோம்:

“பாலஸ்தீன், பல அரசுகளின் கையிலே சிக்கிச் சிதைந்த வரலாறு ஏராளமாக உண்டு.

ரோம் நாட்டவர், பாலஸ்தீனத்தைப் பிடித்து ஜெருசலம் நகரையே இடித்துத் தரைமட்டமாக்கினர் ஒரு சமயத்தில். ஜெருசலம் என்ற பெயரையே நீக்கி விட்டனர் - ‘எலியா காபிடோலினா’ என்ற புதுப் பெயரிட்டு அந்த நகருக்குள் யூதர் பிரவேசிக்கக்கூடாது மீறி நுழைந்தால், அவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என்று உத்தரவிட்டனர். இதுபோல் பன்முறை, யூதர்களுக்குப் பேராபத்து வந்ததுண்டு, ஆனால், மீண்டும் மீண்டும் அவர்களுக்கு ஏதேனும் ஒரு காரணத்தால் பழைய நிலைமையும் வருவதுண்டு.

ரோம் நாட்டவரால், இடித்துத் தரைமட்டமாக்கப்பட்ட ஜெருசலத்தில், ரோம் நாட்டு ராணியாரே, பிறகு அழகான ஓர் கோயில் அமைத்தார் - புனிதபுரியாக்கினார். ஏசு தோன்றி மறைந்தார். அவர் நடமாடிய நகர், புனிதபுரி என்றாயிற்று ரோம் ராணி கிருஸ்தவ மார்க்கத்தை மேற்கொண்டதால், எந்த ரோமிலிருந்து படைகள் கிளம்பி வந்து ஜெருசலத்தை இடித்துத் தள்ளிற்றோ, அதே ரோம் நாட்டிலிருந்து சிற்பிகள் வந்தனர் கோயில்கட்ட - ஜெருசலம் நகரைப் புதுப்பித்து அழகுப்படுத்த. ஜெருசலம், பல ஆண்டுகள், எகிப்து அரசிடம் இருந்திருக்கிறது.

பெர்ஷியா ராஜ்யத்தில் ஒருபகுதியாகப் பல காலம், பாலஸ்தீன் இருந்திருக்கிறது. வரலாற்றிலே, பார்த்தால், பாலஸ்தீன், பலமுறை நைந்திருக்கிறது. பலமுறை ஜொலித்திருக்கிறது. படுகளமாகப் பலமுறை இருந்திருக்கிறது. ஏசு, இரத்தம் சிந்தினார், ஜெருசலத்தில் - மக்களின் இரத்தம், அதற்கு முன்பும் இன்றுங்கூடப் பாலஸ்தீனில், கொட்டப்பட்ட வண்ணம் இருக்கிறது. இரத்த அபிஷேகம் பெற்றுக்கொண்டு வரும், இந்த ஜெருசலம், அதை அடுத்துள்ள அரசுகளை மட்டுமல்ல, ஐரோப்பா முழுவதையும் ஆட்டிப் படைத்திருக்கிறது.

புனிதப் போர்! சிலுவை யுத்தம்! என்று கூறப்படும், போர், ஐரோப்பிய நாடுகளுக்குப் பெரும் பாரமாக இருந்தது.

ஏசுவின் நாட்களுக்குப் பிறகு, ஜெருசலம் கிருஸ்துவ மார்க்கத்தவருக்குப் புனிதபுரியாகி விட்டது. ஐரோப்பாவிலே கிருஸ்தவ மார்க்கம் பரவிவிட்டது. எனவே, ஜெருசலத்தின் மீது ஐரோப்பாவுக்கு ஒரு பற்றும் பாசமும், இயற்கையாகவே ஏற்பட்டது. ஜெருசலத்தைக் காப்பாற்றுவது என்றால், தங்கள் மார்க்கத்தைக் காப்பாற்றுவது என்று பொருள் கொண்டனர். எனவேதான் மூன்று நூற்றாண்டுகள், புனிதப்போர் நடத்தினர் கிருஸ்தவர்கள்.

ஜெர்மனி, பிரான்ஸ், பிரிட்டன், ஹங்கேரி - பல வல்லரசுகள் இந்தப் புனிதப் போரிலே பங்கு எடுத்துக் கொண்டன. எட்டுமுறை, புனிதப்போர்! படை எடுப்புகள்! ஐரோப்பாவிலிருந்து பாலஸ்தீனுக்கு!!

பாலஸ்தீனில், பிறைக்கொடி ! பாலஸ்தீனில், ஜெருசலம்!! ஜெருசலத்தில் ஏசுவின் புதைகுழி! இந்த நிலைமை, போரை ஓட்டிவிடப் போதுமானதாக இருந்தது. இதனுடன், ஜெருசலத்திற்குப் புண்ய காரியமாகச் செல்லும் கிருஸ்தவர், கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்ற செய்தி கலந்து கொண்டது கடும்புயல் கிளம்பிற்று, கிருஸ்தவரின் உள்ளங்களில்! சிலுவைக்கு ஆபத்து! என்ற முழக்கம் கோழைகளையும் வீரராக்கும் அளவுக்கு, ஐரோப்பாவில் பரவிற்று - உணர்ச்சி ஊட்டிற்று. அப்போது பாலஸ்தீன், எகிப்து நாட்டிலே ஒருபகுதி!

**பாலஸ்தீனை விடுவிக்க வேண்டும் - ஜெருசலத்தைப் பாதுகாக்க வேண்டும் புனிதபுரி பிறைக்கொடியினரின் ஆதிக்கத்தில் இருக்கக் கூடாது.**

**இது போர் முழக்கம். மதத்துக்கு ஆபத்து என்ற முழக்கம். மன்னர்களையும் மக்களையும் ஏககாலத்தில் தட்டி எழுப்பிற்று, ஒவ்வொருவரும் தமது சொந்தக்காரியம் என்று கருதித்துடித்து எழுந்தனர்.**

1093-ஆம் ஆண்டு, பீடர் எனும் கிருஸ்தவத் துறவி, ஜெருசலம் சென்று வந்தார். புனிதபுரியிலே, கிருஸ்தவ மக்கள் சொல்லொணாக் கொடுமைக்காளாகி வதைகிறார்கள் என்பதை, அவர் ஐரோப்பாவில் பல்வேறு இடங்களிலே, எடுத்துரைத்து, ஆண்மையாளர்கள் இந்த அக்ரமத்தை ஒழித்தாக வேண்டும். சிலுவையின் மாண்பு பாதுகாக்கப்பட வேண்டும் என்று கூறினார். அவரும் அவர் போன்றோரும், ஆவேசமூட்டக்கூடிய விதத்திலே, பேசினதன் விளைவாக, ஐரோப்பா கண்டமே போர்க்கோலம் பூண்டெழுந்தது.

முதல் புனிதப்போர் 1096இல் துவங்கிற்று. பல்லாயிரக்கணக்கான கிருஸ்தவர்கள் கிளம்பினர் - பயிற்சி - படைக்குரிய இலட்சணம் - இவைகளுமின்றிக் கிளம்பி, பாதி வழிபோவதற்குள், இந்தப் பெருங்கூட்டம் பாழ்பட்டது. பிறகு, காட்ப்ரி என்பவரின் தலைமையில், கட்டுப்பாடான முறையில் 80 ஆயிரம் பேர் கிளம்பினர். பல நாடுகளைக் கடந்து, பல போர்களை நடத்தி வென்று, இந்தப் பெரும்படை, மூன்றாண்டுகளுக்குப் பிறகு, ஜெருசலத்தின் எல்லைக்கு வந்து சேர்ந்தது. கிளம்பும்போது 80 ஆயிரம் பேர்! ஜெருசலத்தின் எல்லையை அடைந்தபோது, எண்ணிக்கை, இருபதினாயிரம் ! அறுபதினாயிரம் பேர், உயிரைக் கொடுத்தனர், புனிதபுரியின் எல்லையைக் காணுமுன்பே.

1099-ஆம் ஆண்டு ஜூன் மாதம், ஜெருசலத்தை முற்றுகையிட்டனர் - அதை ஜூலை 15-ஆம் தேதி பிடித்தனர். கிருஸ்தவ உலகம் களித்தது. மாதா கோயில்களிலே மணி ஓசை கிளம்பிற்று; மகிழ்ச்சி பூத்தது; காட்ப்ரி, ஜெருசலத்தின் மன்னனாக்கப்பட்டான். அடுத்த ஆண்டு அவன் இறந்தான்.

ஜெருசலத்தின் கதி மீண்டும் இருள் கொடுக்கலாயிற்று. எகிப்தின் பிடியில் மீண்டும் ஜெருசலம் சிக்கிற்று. இரண்டாம் புனிதப் போர், தேவையாகிவிட்டது. ஜெர்மன் சக்ரவர்த்தியும், பிரஞ்சுப் பேரரசரும் படை திரட்டினர் - பயன் காணவில்லை - 1149இல் அவர்கள், வெற்றி காணாமலேயே, வீடு திரும்பினர். மூன்றாம் புனிதப் போர் மூண்டது.

தொடர்ச்சி நாளை....





கழக அரசின் நலத்திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர், தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பொன்னான திட்டமான உங்களுடன் ஸ்டாலின் முகாம் கோவை வடக்கு மாவட்டம், மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதி, காரமடை ஒன்றியம் காளம்பாளையம், மருதூர், கெம்மாரம்பாளையம் ஊராட்சிகளுக்கு நடைபெற்றது. இம்முகாமை கோவை வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி துவக்கி வைத்து பயனாளிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார். ஒன்றிய கழக செயலாளர்கள் சு.சுரேந்திரன், தாயனூர் பிரதீப், தலைமை செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.சண்முகசுந்தரம், மாவட்ட துணைச் செயலாளர் அசோக் பாபு உள்பட கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கோவை நேரு கூடைப்பந்து மைதானத்தில் மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை கூடைப்பந்து விளையாட்டுப் போட்டியை கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் துவக்கி வைத்தார். இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன், மாவட்ட விளையாட்டு அலுவலர் புவனேஸ்வரி, மாவட்ட கூடைபந்து சங்க துணைத் தலைவர் பழனிசாமி உள்பட அணிகளின் மேலாளர்கள் பலர் உள்ளனர்.

## ஒழுங்கு நடவடிக்கை ரத்து

### தலைமைக் கழக அறிவிப்பு

தருமபுரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த சி.செந்தில்குமார், பூம்புகார் சின்னசாமி, கே.பி. வைத்தியலிங்கம் மற்றும் ஓரப்பாட்சியூர் கிளையைச் சேர்ந்த லோகநாதன் ஆகியோர் தங்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

அண்ணா அறிவாலயம்
சென்னை - 600 018.
நாள் : 04-10-2025.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

## ஒழுங்கு நடவடிக்கை

### தலைமைக் கழக அறிவிப்பு

கன்னியாகுமரி மேற்கு மாவட்டம், தக்கலை வடக்கு ஒன்றிய துணைச் செயலாளரும் -மாவட்ட சிறுபான்மை நலஉரிமைப் பிரிவு துணை அமைப்பாளருமான ஜீட்சேம் அவர்கள் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (suspension) வைக்கப் படுகிறார்.

அண்ணா அறிவாலயம்
சென்னை - 600 018.
நாள் : 04-10-2025.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.



கோவை தெற்கு மாவட்டம் , வால்பாறை சட்டமன்றத் தொகுதி, ஆனைமலை வடக்கு ஒன்றியம், திவான்சாபுதூர் ஊராட்சி மற்றும் சிங்காநல்லூர் ஊராட்சி பகுதிகளில் ரூபாய் 1 கோடி 62 லட்சம் 37 ஆயிரம் மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட பணிகளை கோவை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி துவக்கி வைத்தார். இதில் ஆனைமலை வடக்கு ஒன்றிய செயலாளர் யுவராஜ் உள்பட மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் தெற்கு மாவட்டம், உடுமலைப்பேட்டை சட்டமன்ற தொகுதி, குடிமங்கலம் மேற்கு ஒன்றியம், தொட்டம்பட்டி ஊராட்சி மற்றும் பண்ணைக்கிணர் ஊராட்சிகளுக்கு பொட்டையம் பாளையத்தில் நடைபெற்ற ”உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை திருப்பூர் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் துவக்கி வைத்து பயனாளிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார். இதில் குடிமங்கலம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் அடிவள்ளி எம். எஸ்.முரளி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் எஸ்.சியாம் பிரசாத் உள்பட மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு துறை சார்ந்த அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.